# திருமந்திரம் காட்டும் பண்பாட்டு நெறிகள்

முனைவர் ம. அரும்பு
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 620 002.

14

**ஆய்வுச்சுருக்கம்**

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற தொடருக்கு அடுத்து தமிழ் இனப்பெருமை பேசும் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற சமய சமரசத்தை முன்வைத்த திருமூலரின் திருமந்திரம் சைவம் தந்த தமிழ் இலக்கியக் கொடைகளுள் சிறப்பானதாக் குறிப்பிடத்தக்கது. சைவத் தோத்திரங்கள் எனப்பெறும் பன்னிரு திருமுறைகளில் பத்தாம் திருமுறையாக திருமூலரின் திருமந்திரம் பலப் பண்பாட்டு விழுமியங்களை வாழ்வியல் கோட்பாடுகளாக அமைத்துத் தருகின்ற சாத்திர நூலாகவும் திகழ்கின்றது. அவ்வகையில் தருமந்திரம் காட்டும் பண்பாட்டு நெறிகள் எனும் பொருண்மையில் இவ்ஆய்வுக் கட்டுரை அமைகின்றது.

**முன்னுரை**

சமயத்தையும் இறைத்தன்மையையும் அடிப்படையாகக் கொண்டு எழுந்த பக்தி இலக்கியம் வெறும் பக்தியுணர்வை ஊட்டும் இலக்கியம் என்ற நிலையில் நில்லாது அது தோன்றிய காலத்தில் தமிழகத்தின் சமுதாய, பொருளாதார, பண்பாட்டுத் துறைகளைக் காட்டும் காலக்கண்ணாடியாகவும் திகழ்கின்றது. இயந்திரத்தனமாக வாழும் மனித மனங்களைப் பண்படுத்தும் இலக்கியங்களில் பக்தி இலக்கியம் தனக்கென ஒரு தனியிடத்தைப் பெற்றுள்ளது. அறம், யோகம், மருத்துவம், தத்துவம் எனத் தமிழில் எழுந்து ஒரு சைவ சமயக் களஞ்சியமாகவே திருமந்திரம் திகழ்கின்றது. திருமந்திரத்தில் காணப்படும் பண்பாட்டு நெறிகளை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**திறவுச்சொற்கள்:** சித்தம் – மனம், மூடர் - அறிவில்லார், சிந்தை – அறிவு,அமரர் - தேவர், வாயுறை - உணவு

**பண்பாடு – விளக்கம்**

பண்பு என்ற சொல்லின் அடிப்படையில் உண்டாக்கப்பட்டது பண்பாடு. பண்படுதல் என்ற பொருள்படுவது. பண்பாடு என்பது பொதுவாக நாகரிகத்தில் அடங்கியது. காலப்போக்கில் மக்கள் தம் வளர்ச்சியின் மன நல ஆக்கமே பண்பாடாக பெயர்பெறுகிறது. மனநலம் சிறப்பாக அமைவதற்கு அறிவு மட்டும் இருந்தால் போதாது. அறிவோடு கூடிய பண்பட்ட மனமும் இருத்தல் வேண்டும். இத்தகைய மனநலத்தோடு ஒவ்வொருவரும் வாழ முயலும் போது ஒட்டுமொத்த நாடும் பண்பட்ட நாடாக மாற வழி வகுக்கும். எனவே, தனிமனிதன் மனத்தைப் பொறுத்தே நடத்தையும் அந்நடத்தையைப் பொறுத்தே நாட்டுப் பண்பாட்டின் வளர்ச்சிக் கூறுகளும் அமைகின்றன.

ஆதிமனிதன் ஒழுங்கு, கட்டுப்பாடு கொண்டு வாழத் தொடங்கியபோது நாகரிகம் தோன்றியது. நாகரிக வாழ்விலும் அகவாழ்வும், புறவாழ்வும் உள்ளன. மக்களின் அகவாழ்விலும், புறவாழ்விலும் பண்பாட்டுக் கூறுகள் அடங்கியுள்ளன. உண்மையான நாகரிகம் என்பது அறிவியல் வளர்ச்சியோ, மக்களின் நடை, உடை, பாவனைகளோ அல்ல. மக்களின் ஒழுக்கமும், நேர்மையுமே ஒரு பெரிய நாட்டின் நாகரிகத்தை எடுத்துக்காட்டக் கூடிய சின்னங்களாகும் என்கிறார் எமர்சன் என்ற அமெரிக்கச் சிந்தனையாளர்.

எனவே, நல்ல ஒழுக்கங்களால், மனதைப் பண்படுத்தித் தானும் பிறரும் அன்பும், அருளும், அமைதியும் நிறைந்து வாழ்வதே பண்பாடு என்று பொருள் கொள்ளலாம்.

**திருமந்திரம் காட்டும் பண்பாடு**

பண்பாடு மனத்தை விரிவடையச் செய்வதும் ஆத்மாவை விளக்கஞ் செய்வதுமாக இருத்தலின் பண்பாட்டுக் கூறுகள் இவ்வுலகில் பொருள் பற்றிய போக்கிலும், ஆன்மீகம் அல்லது அருளியல் பற்றிய நோக்கிலாக இருவகைகளில் ஆழ்ந்து சிந்திக்கப்படுகின்றன என்கிறார் வைத்தியலிங்கம்.

மனிதன் தன் ஐம்புலன்களைச் செம்மையும், தூய்மையும், கட்டுப்பாடும் உடையவைகளாக்கி, அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை போன்ற நற்பண்புகளோடு கூடிய வாழ்வை வாழக் கற்றுக் கொடுத்து உயர்த்துவதே சமயத்தின் நோக்கமாகும்.

இத்தகு உண்மையான அகப்புற வாழ்வு வாழ்ந்து, மெய்ப்பொருளை உணர்ந்து, பரம்பொருளோடு கலந்து முடிவிலா ஆனந்தம் பெற வலியுறுத்தி வழிகாட்டும் சமயப் பண்பாட்டு நூல் திருமந்திரம் எனலாம்.

திருமந்திரத்தில் யாக்கை, செல்வம், இளமை, உயிர் போன்றவைகளின் நிலையாமை, கொல்லாமை, புலால் மறுத்தல், பிறன்மனை நயவாமை, மகளிர் இழிவு, நல்குரவு, அறஞ்செய்வான் திறம், அறஞ்செய்யான் திறம், அன்புடைமை, கள்ளுண்ணாமை, பொறையுபைக, தீவன செய்யாது ஒழுகுதல், கூடா ஒழுக்கம், புறங்கூறாமை, வாய்மை, அவா அறுத்தல் போன்ற தனிமனித ஒழுக்கங்கள் விரிவாக்க் கூறப்பட்டுள்ளன. தனிமனித ஒழுக்கமே சிறந்த பண்பட்ட சமுதாயம் உருவாக அடிகோலுகின்றன.

**அன்பு**

அன்பு என்து அகத்தே உணரும் உன்னதமான உணர்வு. இதற்குப் புறவடிவம் என்ற ஒன்று இல்லை. அன்பு ஒருவனை வந்த, அவன் நல்ல செயல்களில் ஈடுபடுவான். அதுவே அன்பின் அடையாளமாகும். அன்பு தெரித்தவர்களிடையேயும் பழகியவர்களிடையேயும் ஏற்படக் கூடியது. ஆனால் அருள் என்னும் அன்பு எல்லா மனிதர்களிடையேயும் வேறுபாடு காண இயலாத நிலையில் தோன்றுவது. உலகில் அன்புடையோர் பலர். ஆனால் அருளுடையோர் மிகச் சிலரே. அன்பும் அருளும் மனித சமுதாயத்தை உயர்த்துவன ஆகும். இறைவனிடம் ஏற்படும் அன்பு முதிர்ந்த இறைபேரின்பத்தை ஏற்படுத்தும்.

**இறையன்பு**

அன்பு இல்லாமல் அறமும் இல்லை. அருளும் இன்பமும் இல்லை. இந்த உண்மையான அன்பே சிவமாகும். இந்த அன்பைப் பற்றி அறியாதவர் அன்பு வேறு சிவம் வேறு என்கின்றனர். அறிந்தவர் தம்மிடத்துள்ள அன்பையே தவமாகத் துலங்க்க் காண்பர். மனிதனுக்கு யோகப்பயிற்சியினாலும் பக்தி உள்ளுணர்வினாலும் இறைவன்பால் உருவானது இறையன்பு எனப்படும். அன்பும் சிவனும் ஒன்றே, இரண்டல்ல என்று கூறுகின்றார் திருமூலர். இதனைத் திருமந்திரம்

**அன்பும் திவமு மிரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே** (திரு.270)

என்று கூறுகின்றது.

**ஈகை**

மனித நேயப் பண்பாட்டின் வெளிப்பாடுகளில் ஒன்று ஈகை அளித்தல். பொருளாதார வசதி மிக்கோர் பொருளாதார நிலையில் நலிவுற்று வருந்துவோரைத் தம்மைப் போன்ற மனிதர்களே அவர்களும் என்ற மனித நேய உணர்வுடன் கொடை கொடுத்து வாழ்ந்தால் வறுமையில் வாழுவோரின் துன்பம் ஓரளவு அகலும்.

**யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை**
**யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை**
**யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்படி**
**யாவர்க்கு மாம்பிறர் கின்னுரை தானே**

என்று திருமூலர் பசிப்பிணியை அகற்றும் உணவை ஈகையாக கொடுக்க வேண்டும் என வலியுறுத்துகின்றார்.

**பெரியோரைத் துணைக்கோடல்**

நாம் அறிவாலும் பண்பாட்டாலும் தம்மைவிட மேம்பட்ட பெரியோர்களைத் துணையாகக் கொண்டு வாழ்ந்தால் நம் வாழ்க்கைச் சிறப்படையும். எனவே சிற்றனம் சேராது பெரியாரைத் துணைகொண்டு வாழ வேண்டும். இந்தச் சமுதாய மதிப்பானது,

**அறிவார் அமரர் தலைவனை நாடிச்**
**செறிவார் பெறுவர் சிவதத் துவததை**
**நெறிதான் மிகமிக நின்றருள் செய்யும்**
**பெரியாரு பன்கூடல் பேரின்ப மாமே**

எனத் திருமூலரால் வலியுறுத்தப்படுகின்றது.

**பொறையுடைமை**

பொறையுடைமை மூலம் பல்வேறு சமுதாயப் பிரச்சனைகளையும் தனிமனிதப் பிரச்சனைகளையும் நீக்கிவிடலாம். பொறையுடைமை உள்ளோரிடத்தில் அனைவரும் நட்பாய் பழகுவர். எனவே பொறையுடைமை அனைவராலும் பின்பற்ற வேண்டிய ஒன்று என்பது புலனாகிறது. திருமூலர் பற்றுள்ளம் கொண்டாரிடத்தும் பொறாமை என்ற குணம் பற்றிக் கிடந்த்து. பொறாமை நம்மைப் பற்றாமலிருக்கப் பொறுமையை மேற்கொள்ள வேண்டும் எனத் திருமூலர்

**பற்றி நின்றார் நெஞ்சில் பல்லிதான் ஒன்றுண்டு**
**முற்றிக் கிடந்தது மூக்கையும் நாவையும்**
**தெற்றிக் கிடந்து சிதைக்கின்ற சிந்தையுள்**
**வற்றா தொழிவது மாகமை யாமே**

என்ற மடலில் மூலர் அறிவுறுத்துகின்றார்.

**கொல்லாமை**

**“தன்னூன் பெருக்கிற்குத் தான்பிறிது ஊறுண்பான்**
**எங்ஙனம் ஆளும் அருள்”**

தன் உடம்பைப் பெருக்கச் செய்வதற்காகத் தான் மற்றோர் உயிரின் உடம்பை உண்பவன் பிற உயிர்களிடத்தில் எவ்வாறு அருள் உடையவனாக இருக்க முடியும் எனக் கேட்கிறார் திருவள்ளுவர்.

கொல்லாமை, புலால் மறுத்தல் என்று பல அதிகாரங்கள் திருவள்ளுவர் சொல்வதன் மூலம் அவர் இந்த கருத்தை எவ்வளவு ஆழமாக கூறுகிறார் என்பது தெளிவு. அதே போல் திருமந்திரத்திலும்

**“பற்றாய நற்குரு பூசைக்கும் பன்மலர்**
**மற்றோர் அணுக்களைக் கொல்லாமை ஒண்மலர்**
**நற்றார் நடுக்கற்ற தீபமும் சித்தமும்**
**உற்றாரும் ஆவி ஆர்ந்திடம் உச்சியே”**

ஒப்பற்ற ஞன குருவாக விளங்கும் சிவபெருமானுடைய பூஜைக்கு உகந்த பல மலர்களுள் முதன்மையானது கொல்லாமை என்னும் மலர் என்று கூறப்பட்டுள்ளது.

**சமுதாயச் சீர்திருத்தம்**

சித்தர்கள் அனைவரும் சமுதாயச் சீர்திருத்தவாதிகளாக விளங்கினர். திருமூலரும் 113 பாடல்களில் உலகிற்கு அரிய அறிவுரைகளைக் கூறிகின்றார்.

**மயக்கும் சமய மயமன்று மூடர்**

எனச் சமயத்தினைச் சாடுகின்றார். சமயம் அறிவை மயக்கும் என்கின்றார். அறிவு அழிந்தால் தனித்தன்மை கெடும். மனிதன் உணர்வு மேலோங்கப் பெறுவான். விலங்கோடு ஒத்த நிலையை அடைவன். இறைவன் வடிவத்தைக் கோயில் கோயிலாகச் சென்று தரிசித்து வருபவர்களைப் பார்த்து நகைக்கின்றார்.

**முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்கள்**
**அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்**

இறைவனை முகத்தில் உள்ள கண்கொண்டு பார்க்க்க்கூடாது. உள்ளத்தின் கண்கொண்டு பார்க்க வேண்டும். அதுவே இன்பம் தரும் என்கின்றார்.

**முடிவுரை**

திருமூலர் குறிப்பிடும் அறச்சிந்தனைகளை ஒவ்வொரு தனிமனிதனும் தன் வாழ்நாளில் பின்பற்றினாலே பண்பட்ட சமுதாயம் மலரும் என்பது திண்ணம். இன்றைய நிலையில் சீர்குலைந்து வருகின்ற நம் பண்பாட்டை சீரமைக்க திருமந்திரம் வலிகோலும் என்பது மறுக்கமுடியாத உண்மை என்பதை அறியமுடிகின்றது.

**துணை நின்ற நூல்கள்**

1. அருணாசலம் ப., - திருமந்திரக் கோட்பாடு,முல்லை நிலையம், சென்னை – 2002.
2. ஆச்சார்யா பி.எஸ்., - திருமூலர் அருளிய திருமந்திரசாரம் நர்மதா வெளியீடு, சென்னை – 2009.
3. மீனாட்சி கா., - திருமூலரின் கற்றல் கோட்பாடுகள் மீனாட்சி வெளியீடு, சென்னை – 2004.
4. சத்தியவேல் மு.பெ., - திருமந்திரச் சிந்தனைகள்உமா பதிப்பகம், சென்னை – 2003.
5. மாணிக்கவாசகா இரா.,- திருமந்திர ஆராய்ச்சி அன்னை அபிராமி அருள், சென்னை – 1982.